# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
# DEPOSITIONS OF WITNESSES
# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
# DEPOSITIONS OF WITNESSES P.W.10 (L.W.21)
# SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| **Name** | : | Thiru.Rajan |
| **Father Name** | : | |
| **Occupation** | : | Rtd.Scientific Officer, Ballistic Division, FSL, Chennai |
| **Taluk** | : | |
| **Age** | : | 68 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.01.2026

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்:02.30 p.m**

**முதல் விசாரணை–**

நான் சென்னை தடய அறிவியல் துறையில் இணை இயக்குநராக பணி செய்து 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பணி ஓய்வு பெற்றேன். 28.04.2008 அன்று தடய அறிவியல் துறை, சென்னையில் துப்பாக்கி பிரிவில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்தபோது வேலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து வேண்டுகோள் கடிதம் பெறப்பட்டது. அந்த கடிதத்துடன் பாகாயம் காவல் நிலைய குற்ற எண். 266/2006 சம்மந்தப்பட்ட பொருட்கள்

பொருள்–1– மொத்த நீளம் 153 செ.மீ., குழல் நீளம் 111.7 செ.மீ., குழலின் உள்விட்டம் 0.440 அங்குலம் அளவுள்ள ஒற்றை குழல் மருந்து துப்பாக்கி அதன் வெடி மருந்து வெடிக்கும் தன்மையுடன்

பொருள் –2 –145.7 செ.மீ. மொத்த நீளமும், 105 செ,.மீ. குழல் நீளமும், குழலின் உள்விட்டம் 0.450 அங்குல அளவுடைய ஒற்றை குழல் மருந்து துப்பாக்கி அதன் வெடி மருந்து வெடிக்கும் தன்மையுடன்

பொருள்–3– 0.38 அங்குல அளவுடைய 6 தோட்டா அறைகளை கொண்ட Smith and Wesson சுழல் கை துப்பாக்கி அதன் எண். V79164

பொருள் –4–0 .380 அங்குல அளவுடைய சுடப்பட்ட காலி தோட்டா

இந்த பொருட்கள் தலைமை காவலர் எண். 320 திரு.திருமூர்த்தி மூலமாக நீதிமன்ற முத்திரையுடன் ஆய்விற்காக பெறப்பட்டது. பொருட்களை நான் ஆய்வு செய்தேன். ஆய்வு செய்ததில் பொருள் 1 மற்றும் 2 ஆகியவற்றில் சீரான குழலை உடைய ஒற்றை குழல் நாட்டு மருந்து துப்பாக்கிகளாகும். 1959 ஆம் வருட சுடு படைக்கலன் சட்டத்தில் இவைகள் துப்பாக்கிகளாகும். பொருள் 3 ஆனது 0.38 அங்குல அளவுடைய 6 தோட்டா அறைகளை கொண்ட சுழல் கைத்துப்பாக்கியாகும். துப்பாக்கிகளையும் குழல்களை ஆய்வு செய்தபோது பொருள் 1 மற்றும் 2 குழல்களில் வெடி மருந்து வெடிப்பதால் ஏற்படும் ரசாயண பொருட்களும் பொருள் 3 ன் குழலின் புகையில்லா வெடி மருந்து வெடிப்பதால் ஏற்படும் ரசாயண பொருள் கண்டுபிடிக்கப்பட்டன. எனவே நான் பரிசோதனை செய்தவதற்கு முன்னால் இந்த துப்பாக்கிகள் சுடுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது தெரியவந்தது. சோதனைக்காக பரிசோதித்து பார்த்தபோது துப்பாக்கி பொருள்கள் 1, 2 மற்றும் 3 சுடுவதற்கு பயன்படுத்த தகுந்த நிலையில் இருந்தன. பொருள் 4 ஆன 0.380 அங்குல அளவுடைய காலி தோட்டாவில் காணப்பட்ட சுடு ஊசி அடையாளங்கள் துப்பாக்கி பொருள் 3 –லிருந்து சோதனைக்காக பெறப்பட்ட காலி தோட்டாக்களுடன் காணப்பட்ட சுடு ஊசி அடையாளங்கள் ஒப்பு நோக்கி பார்த்தபோது அவைகள் ஒரே மாதிரியாக இருந்தன. எனவே காலி தோட்டா பொருள் 4 துப்பாக்கி பொருள் 3 லிருந்து தான் சுடப்பட்டது என்று தெரியவந்தது. இது குறித்து ஆய்வு அறிக்கை T.NO.3053/2008–BALL/60/2008 நாள் 26.08.2008 அன்று தயார் செய்து கையொப்பமிட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த அறிக்கை இதுதான். அந்த அறிக்கை ( 2 தாள்கள்) **அ.சா.ஆ. 6** ஆகும். என்னை ADSP விசாரித்தார்.

குறுக்கு விசாரணைக்காக வழக்கு நிறுத்தி வைக்கப்படுகிறது. நேரம்–02.50 p.m

**<u>4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–நேரம் – 03.35 p.m</u>**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

1 மற்றும் 2 வது எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை. எனவே குறுக்கு விசாரணை தற்போது இல்லை.

**விசாரணை முடிந்த நேரம்: 03.40 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI

Digitally signed by G SANTHI
Date: 2026.01.12 18:25:16 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்